*6*

# கிறிஸ்தவ வாழ்க்கை முறையின் இனிமை

## (எபேசியர் 4:17-32)

*"பணக்காரர்கள் மற்றும் புகழ்பெற்றோரின் வாழ்க்கைமுறை" என்னும் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்று 1984ல் அறிமுகப் படுத்தப்பட்டது. மற்றும் ஜனங்களின் வாழ்க்கையை ஊடுருவி பார்த்தல் என்ற கருத்து பிரபலமாய் நிலைத்திருக்கிறது. நான் ஒருமுறை, ஐரோப்பாவில் தங்கியிருந்தபோது, ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட அதே போன்ற தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றை பார்த்தேன். மற்றவர்கள் எப்படி வாழ்கிறார்கள் என்று அறிவதில் எல்லா இடத்து ஜனங்களுமே ஆர்வம் காட்டக் கூடியவர்களாயிருக்கிறார்கள் என்று தெரிகிறது. மனித வர்க்கத்திற்கே உரிய ஆர்வத்துடன் நாம், மற்ற ஜனங்களின் உடை, பேச்சு, மற்றும் அன்றாட வாழ்க்கையில் காணும் நடத்தைகளை ஆர்வமாக கூர்ந்து கவனிக்கும் தன்மையைப் பெற்றிருக்கிறோம்.*

*கிறிஸ்தவனின் வாழ்க்கை முறை முக்கியமானது, ஏனெனில் சபையின் அங்கத்தினர்கள் வாழ்கிற விதத்தை மற்றவர்கள் கண்காணித்துக் கொண்டிருக்கிறார்கள் (மத்தேயு 5:13-16; 1 பேதுரு 2:11, 12). கிறிஸ்துவைப் பின்பற்றுவோர் தங்கள் வாழ்க்கை முறையில் மிகவும் பொறுப்புள்ளவர்களாய் வாழ்ந்து, கிறிஸ்தவர்களுக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வித்தியாசத்தை தெளிவாக உணரச் செய்கிற பொறுப்பு இருக்கிறது. ஒரு பிரசங்கியார் இந்தப் பொறுப்பை விளக்கப்படுத்தி கிறிஸ்தவன் "சுவிசேஷத்தால் கட்டடப்பட்ட பாதரட்சை வாரை அணிந்தவன்" என்றார். (இந்த மொழி மரபு சாதாரண கிறிஸ்தவ வாழ்க்கை - அன்றாடம் அவன் "நடந்து கொள்ளும்" விதம் - மட்டுமே சுவிசேஷத்தை அநேகர் அறிந்து கொள்ள ஒரே வழி என்று பொருள்.) பவுல் கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு நினைப் பூட்டி அவர்கள் எல்லாராலும் வாசித்து அறியப்பட்டிருக்கிற கடிதங்கள் அல்லது "நிருபங்கள்" என்றார் (2 கொரிந்தியர் 3:1, 2). இது தெளிவான ஒரு ஆய்வு. ஜனங்கள் உங்களுடைய வாழ்க்கை முறையைக் காண்கிறபோது, என்னத்தைக் காண்கிறார்கள்? உங்கள் நடத்தைகளை அவர்கள் கருத்துடன் கவனிக்கும்போது, உங்கள் பேச்சு, உடை, மற்றும் சாதாரண வியாபார சம்பந்தப்பட்ட விவகாரங்கள், ஆகியவைகளைக் கண்ணுற்று உங்கள் வாழ்க்கையைக் குறித்து அவர்கள் "வாசிப்பது" என்ன?*

*"நாம் காணும் பிரசங்கங்கள்" எனும் தலைப்பிடப்பட்ட கவிதையொன்று கிறிஸ்தவ வாழ்க்கை முறையின் முக்கியத்துவம் பற்றி விளக்கமளிக்கிறது. எபேசியர் 4:17-32ல் பவுலால் விவாதிக்கப்பட்ட இந்த வார்த்தைகள் மனமாற்றப் பட்ட வாழ்வின் முறை பற்றி பேசுகிறது. இதை சிந்தனையோடு வாசித்துப் பார்த்து அதன் வல்லமையான செய்திக்கு கவனம் செலுத்துங்கள்:*

*எந்த ஒரு நாளிலும் நான் ஒரு பிரசங்கத்தைக் கேட்பதிலும் பார்ப்பதையே விரும்புகிறேன்;*

*எனக்கு வழியைச் சொல்லிக் கொடுப்பதைக் காட்டிலும் என்னோடு ஒருவர் நடப்பதையே நான் விரும்புகிறேன்.*

*காதுகள் கேட்கும் ஆர்வத்தைக் காட்டிலும் சிறந்த மாணவன் கண்களே,*

*அருமையாய் ஆலோசனை கொடுப்பது குழப்பமே, ஆனால் முன் மாதிரிகள் எப்பொழுதும் தெளிவு;*

*எல்லா பிரசங்கியார்களிலும் தனது உபதேசத்தின்படி வாழ்ந்து காட்டுபவரே சிறந்த பிரசங்கியார்,*

*எல்லாருடைய தேவைகளும் செயலில் காட்டப்படும் நல்ல கண் காட்சிதான்.*

*ஒன்றைச் செய்து காட்டுவாயானால், நான் சீக்கிரமே அதன்படிச் செய்யக் கற்றுக் கொள்வேன்;*

*உன்னுடைய கைகள் செயலாற்றுவதை நான் பார்த்துக் கொண்டிருக்கும்போது; உன் நாவுகள் அதிலும் அதிவேகமாய் ஓடுகிறது.*

*நீ கொடுக்கும் பிரசங்கம் மிகவும் ஞானமுள்ளதும் உண்மையானதுமாக இருக்கலாம்,*

*ஆனால் மாறாக நீ செய்வதை கூர்ந்து கவனித்து எனக்கு பாடத்தைக் கற்றுக் கொள்வேன்;*

*உன்னையும் உன்னுடைய பெரிய அறிவுரையையும் ஒருவேளை நான் தவறாகப் புரிந்து கொள்ளலாம்.*

*ஆகிலும் நீ எப்படி செயல்படுகிறாய் மற்றும் எப்படி வாழ்கிறாய் என்பதில் எனக்குச் சந்தேகமேயில்லை.*[1]

*ஒருவருடைய செல்வாக்கை வேத வசனம் சிறப்புக் கூறுகளாய் அதன் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது (பிலிப்பியர் 2:15; 1 தெசலோனிக்கேயர் 1:7, 8; 1 தீமோத்தேயு 6:1). மனமாற்றப்பட்ட வாழ்க்கையை வாழ்வதன் அவசியம் மறு வலியுறுத்துதலாக எபேசியர் 5:8-6:9ல் பேசப்படுகிறது.*

*எபேசியர் 4:17-32ல், கிறிஸ்தவ வாழ்க்கைமுறை விளக்கமாகப் பேசப் படுகிறது. ஒருவர் கிறிஸ்தவனாக மாறுவதற்கு முன்பு அவன் வாழ்ந்த முறையும் கிறிஸ்தவனாக மாறின பின்பு அவன் வாழ்கிற முறையும் மறுக்க முடியாத வேறுபாடுகளைக் கொண்டுள்ளது. இந்த வசனப் பகுதி ஊக்கமளிக்கக் கூடியது, ஏனெனில் கிறிஸ்தவர்கள் உலகத்திலிருந்து வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் வித்தியாசப்பட்டிருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது. ஒரு புதிய கிறிஸ்தவன் தன்னைச் சுற்றியிருக்கிற மற்ற எல்லாரிலுமிருந்து தான் வித்தியாசப்பட்டவன் என உணரும்படி பவுலின் வார்த்தைகள் அவனுக்கு உதவக்கூடியன. இந்த வித்தியாசம் கிறிஸ்தவத்துக்கு சந்தோஷத்தை அளிக்கிறது. புதியாய் மனமாற்றப்பட்டுள்ள நீங்கள், தேவபக்திக்குரிய வாழ்க்கை முறையை இப்போது தெரிந்து கொண்டிருப்பதால் நீங்கள் சந்தோஷத்தால் நிரப்பப்பட வேண்டும், ஏனெனில் அது நித்திய பிரதி பலன்களைக் கொண்டுவருகிறது. தேவன் விரும்புகிறபடி தான் வாழ்ந்துகொண்டிருக்கிறேன் என்று ஒருவர்*

அறிவதால் கிடைக்கிற பெரிய ஒரு திருப்தியைப் போல, வேறு எதுவுமில்லை. பரிசுத்தமாக்கப்பட்ட வாழ்க்கையை வாழ்வதில்தான் குறிப்பிடத்தக்க அந்த வித்தியாசம் கிறிஸ்தவர்களுக்கு சந்தோஷத்தைக் கொண்டு வருகிறது (தீத்து 2:11-14; 3:1-8).

எபேசியர் 4:17-32ல் சொல்லப்பட்டுள்ள கிறிஸ்தவனின் வாழ்க்கை முறையின் செல்வாக்கின் இனிமையைக் குறித்து ஏவப்பட்ட விளக்கத்தை கூர்ந்து கவனியுங்கள். இருதய வலியாலும் மனக்கலக்கங்களாலும் நிரம்பியுள்ள இந்த உலகிற்கு தேவனுடைய பிள்ளையாகிய நீங்கள் இன்பத்தையும் சந்தோஷத்தையும் கொண்டு வருகிறீர்கள்! உலகத்தில் உங்கள் வாழ்க்கை முறை ஏன் சுகந்த வாசனையாக புகழப்பட வேண்டும்? இந்தக் கேள்விக்கு மேற்குறித்த வசனப் பகுதியில் பதில் கொடுக்கப்பட்டுள்ளது.

## வேறுபாடுகள் உள்ள ஒரு வாழ்க்கை (4:17-19)

“நடை” எனும் பதம் இங்கே உருவகமாக ஒருவருடைய வாழ்வு முறையை விவரித்துப் பேசுகிறது. நீதிமொழிகள் புத்தகம் “நீதிமானையும்” “உத்தமமானவனையும்” குறிக்கக் கூடிய ஒரு “நடத்தலைப்” பற்றிப் பேசுகிறது (2:7, 13, 20). எபேசியர் புத்தகத்திலும் “நடத்தல்” எனும் பதம் ஒருவருடைய வாழ்க்கை முறையை அடிக்கடி பேசுகிறது (4:1, 17; 5:2, 8, 15). இன்றைய பழமொழி ஒன்று இதே பதத்தைப் பயன்படுத்தி பேசுகிறது: “உங்கள் *நடை* உங்கள் *வாக்கைப்* போல் இருக்கட்டும்.” இந்தப் பழமொழி பல மொழிகளில் இருக்கிறது. அவைகளின் கருத்து ஆவிக்குரிய காரியங்கள் சொல்லப்படும் வாழ்க்கையோடு அமைந்திருக்க வேண்டுமென்பதை பேசுகிறது. வசனம் 17ன் போதனை இதுதான். நீங்கள் கிறிஸ்தவராக மாறியதால், உங்கள் *நடையானது* உங்கள் *வாக்கை* மெய்ப்பிப்பதாக இருக்க வேண்டும் என்பதே. இன்னொரு வார்த்தையில், “நீங்கள் கிறிஸ்தவனென்று சொல்வீர்களானால் பிறகு நீங்கள் வாழும் வாழ்க்கை முறையில் கிறிஸ்தவத்தைக் காட்டுங்கள்” என்று நாம் சொல்லலாம்! சுவிசேஷத்துக்கு கீழ்ப்படிந்த ஒருவர் மற்ற எல்லாரிலுமிருந்து மாறுபட்டவராயிருக்க கடமைப்பட்டவர், ஏனெனில் அவர் ஒரு புது “சிருஷ்டியாயிருக்கிறார்” (2 கொரிந்தியர் 5:17).

கிறிஸ்தவ வாழ்க்கை முறை உலகிற்கு பல மாறுபட்ட காட்சிக் கருத்துக்களை விளங்கப் பண்ணுகிறது. நீங்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவரும், தேவனைப் பின்பற்றுகிறவருமாயிருக்கிறீர்கள் என்பதால், உங்களுடைய அன்றாட வாழ்க்கை முறையில் நீங்கள் வேறுபட்டவராயிருப்பீர்கள்.

*முதலாவதாக, நீங்கள் உங்களுடைய சிந்தனையிலே வேறுபட்டவராகிறீர்கள்* (வசனம் 17). ஒருவருடைய மனமாற்றத்துக்கு முன், ஒருவருடைய சிந்தை தேவன் கட்டளையிடும் வாழ்க்கை முறைக்கு முரண்பட்ட சிந்தையுடையவராயிருப்பார். உலகத்து மனுஷர் தங்களின் சிந்தனை மதிப்பு மிக்கது என்று நம்புகிறார்கள் ஆனால் திருமறை உலக சிந்தனைகள் “விருதாவானது” என்று (வெறுமையும் பிரயோஜனமற்றதும் என்று) சொல்லுகிறது. ஏன்? உலகத்தார் தங்களுடைய வாழ்க்கையை வழிநடத்த தேவனுடைய வெளிப்பாடு தங்களுக்குத் தேவை என்று விசுவாசிப்பதில்லை. உலக சிந்தனையாளர்கள் சொல்லுவது

யாதெனில், போதிய மனமகிழ்ச்சி, சொத்துக்கள், அதிகாரம் அல்லது கௌரவம் இருக்குமேயானால் பிறகு நீங்கள் சந்தோஷமாக வாழலாம். அப்படிப்பட்ட பலன்களைத் தேடும் முயற்சியில், உலகப் பிரகாரமான மனுஷன் தேவனை புறக்கணித்து, மறுதலித்து, கண்டு கொள்ளாமல் விட்டு விடுகிறான்! நீங்கள் இப்போது கிறிஸ்துவுக்குள் இருப்பதால், மறுபடியும் உலகத்தானைப் போல் சிந்திக்கக் கூடாது. உங்களுடைய கிறிஸ்தவ சிந்தனைகள், நடத்தைகள் மற்றும் இலக்கு (குறிக்கோள்)களெல்லாம் நீங்கள் திருமறையைப் பின்பற்றுவதால் விலைமதிப்புள்ளவைகள்!

*இரண்டாவதாக, நீங்கள் புரிந்து கொள்ளுதலில் வேறுபட்டவராக இருக்கிறீர்கள்* (வசனம் 18அ). ஏனெனில் உலகத்தின் சிந்தனைகள் தவறானவை, அப்படிப்பட்ட சிந்தனையிலிருந்து புரிந்து கொள்ளும் தன்மையும் தவறாகவே முடிவு பெறுகிறது! "புரிந்துகொள்ளுதல்" எனும் பதம் "பற்றிக்கொள்ளுதல்" மற்றும் "அறிந்துஉணருதல்" என்று பொருள் படும். மனம் மாற்றப்படாத நபர் தேவனுடைய வசனமாகிய திருமறை, எப்படித் தனது வாழ்க்கை முறையை தெரிவு செய்வதில் வழிநடத்துகிறது என்பதை அறிந்துகொள்ள இயலாது. கிறிஸ்துவுக்கு மனமாற்றப்பட்டவர் பாவ இருளிலிருந்து வெளியே வந்து சத்தியத்தை புரிந்து கொள்ளுதலின் வெளிச்சத்துக்கு வந்து சேர்ந்திருக்கிறார்.

*மூன்றாவதாக, தேவனோடு உள்ள ஐக்கியத்தில் நீங்கள் வேறுபட்டவராயிருக்கிறீர்கள்* (வசனம் 18ஆ). மனமாற்றப்படாத ஒருவர் தேவன் இருக்கிறார் என்பதை ஏற்றுக் கொண்டு உபத்திரவ நேரத்தில் தனக்கு உதவி வேண்டி ஜெபிக்க ஆசையாயிருப்பார், ஆகிலும் அவர் தேவனிடத்தில் ஐக்கியம் கொண்டிருக்க மாட்டார். அவர் ஒரு அந்நியனும் கர்த்தரிடத்திலிருந்து பிரிக்கப்பட்டவருமாவார். அதற்கு மாறாக, கிறிஸ்துவுக்காக மனமாற்றப்பட்ட ஒருவர் தேவனுடைய குடும்பத்தில் பிறந்திருக்கிறார் மற்றும் மிகுந்த நம்பிக்கையோடே அவர் தேவனை "தகப்பனைப் போல" தொழுது கொள்ளலாம் (2:18). புதிதாய் மனமாற்றம் பெற்றவர் "ஒளியிலே நடக்கும்படி" ஜாக்கிரதையுள்ளவராயிருக்கிறார், அதினால் அவருடைய பிதாவோடு இருக்கிற ஐக்கியம் ஒருபோதும் தடைப்படாது (1 யோவான் 1:6-10).

*நான்காவதாக, நீங்கள் உங்களுடைய அறிவிலே வேறுபட்டவராயிருக்கிறீர்கள்* (வசனம் 18இ). மனமாற்றப்படாத நபர் தேவனை அறியாதவரும் தேவனை அறிந்து கொள்ள விரும்பாதவருமாய் இருக்கிறார். உலகம் "அறியாமையுள்ளது" என்று சிறப்பியல்பாக குறிப்பிடப்படுகிறது. கிறிஸ்துவுக்கு கீழ்ப்படியாதவர்கள் ஏசாயா தீர்க்கதரிசியினால் விவரிக்கப்படுகிற பழைய ஏற்பாட்டு இஸ்ரவேல் ஜனங்களைப் போன்றவர்களாயிருக்கிறார்கள்: "மாடு தன் எஜமானையும் கழுதை தன் ஆண்டவனின் முன்னணையையும் அறியும்; இஸ்ரவேலோ அறிவில்லாமலும், என் ஜனம் உணர்வில்லாமலும் இருக்கிறது" (ஏசாயா 1:3). கிறிஸ்தவன் கர்த்தராகிய தேவனை அறிகிற அறிவை அடைந்திருக்கிறான் (ஏசாயா 37:20), மற்றும் தேவனைப் பற்றிய அவனது இந்த புதிய அறிவு அவனுடைய வாழ்க்கை முறையை வழி நடத்துகிறது (பிலிப்பியர் 3:10).

*ஐந்தாவதாக, உங்களுடைய அறிவுக்கூர்மை உங்களை வேறுபட்டவராக்குகிறது* (வசனங்கள் 18ஈ, 19). மனமாற்றப்படாத ஒருவர் கடின இருதயம் உள்ளவராயிருக்கிறார், ஆகிலும் கிறிஸ்தவன் "குத்தப்பட்ட"

*இருதயமுள்ளவன் (நடபடிகள் 2:36-38;* KJV; ASV*). உலகப் பிரகாரமான வாழ்க்கை முறையில் வாழ்வோர் தங்களுடைய சுயநலம் மற்றவர்களை எப்படி பாதிக்கிறது என்பது குறித்து கவலைப்பட மாட்டார், ஆனால் கிறிஸ்தவன் தனது வாழ்வுமுறை மற்றவர்களுக்கு எப்படி நன்மதிப்பைக் கொடுக்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்கிற அக்கரையோடு ஒவ்வொரு நாளும் வாழ்கிறார். உலகத்தில் இருப்போருக்கு தேவனைக் குறித்த உணர்வே இல்லாதிருக்கும்போது, மனமாற்றப்பட்டவர் தனது தெரிவு எப்படி தேவ மனோபாவத்தை பாதிக்கக் கூடும் என்பதில் மிகவும் கவனமாக இருப்பார். கிறிஸ்தவனின் புத்திக் கூர்மைக்கும் கிறிஸ்தவனல்லாதவனுக்கு இருக்கும் புத்திக் கூர்மைக்கும் மிகப் பெரிய வேறுபாடு காணப்படுகிறது. ஒருவரது தலையாய அக்கரையெல்லாம் தனது வாழ்க்கை முறையின் தெரிவுகள் தேவனுடைய பார்வையில் எப்படிப்பட்ட எண்ணங்களை உண்டாக்குகிறது என்பதைக் கண்ணுறுவது எவ்வளவு அழகானது! அவர் தனது வாழ்வு முறையினால் தேவனைத் "துக்கப்படுத்தாதபடிக்கு" மிகவும் கவனமாயிருப்பார் (ஆதியாகமம் 6:6; எபேசியர் 4:30).*

*இந்த ஐந்து வித்தியாசங்களும் கிறிஸ்தவர்களுக்கும் கிறிஸ்தவர்களல்லாதோருக்குமிடையேயான வாழ்வுமுறை. கிறிஸ்துவைப் பின்பற்றுவோருக்கு சந்தோஷமுண்டு, ஏனெனில் அவர் வாழ்க்கையின் நல்ல பங்கைத் தெரிந்து கொண்டு அந்தத் தெரிவின்படி வாழ்கிறார். தேவ பக்திக்குரிய முந்நுரிமையின்படி வாழத் தெரிந்தவர்களை கர்த்தர் கனம் பண்ணுவார் (லூக்கா 10:42).*

## *ஒரு சீரான வாழ்க்கை (4:20-24)*

*கிறிஸ்தவரின் வாழ்வுமுறை சீரானதாயிருக்க வேண்டும்! புரிந்து கொள்ளுதலின் வெளிச்சம் ஒவ்வொரு தெரிவுக்கும் ஒவ்வொரு நாளும் நடத்த வேண்டும். கிறிஸ்தவனாக ஒருவர் மாறுகிறபோது, "மனந்திரும்பி குணப்படும்படி" தீர்மானிக்கிறார் (நடபடிகள் 3:19). இந்தத் தீர்மானம் தொடர்ந்து நடப்பிக்கப்படவேண்டும். "மனந்திரும்புதல்" என்பது ஏதோ ஒரு முறை மட்டும் நடக்கும் செயல் அல்ல, அது ஒரு தொடர் செயலாகும் (1 யோவான் 1:6-9). கிறிஸ்தவன் ஒவ்வொரு நாளும் தேவனுடைய சித்தத்தை மென்மேலும் கற்றுக் கொண்டு வருகிறான்; அதன் விளைவாக ஒவ்வொரு நாளும் சில குறிப்பிட்ட மாற்றங்களை அது கொண்டு வருகிறது.*

*கிறிஸ்தவ வாழ்வு முறையின் அபிவிருத்தி துணிகளை மாற்றுவதற்கு ஒப்பானதாக உதாரணமாக்கிப் பேசப்படுகிறது. புதிதாய் மனமாற்றப்பட்டவர் தனது பழைய காரியங்களைக் களைந்து புதிய காரியங்களை தரித்துக் கொள்கிறார். மீண்டும் ஒரு முறை வேறுபாடு தெளிவாய் இருக்கிறது: பழையவைகளை களைந்துபோட்டு புதியவைகளை ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள். மேற் குறித்த வசனப் பகுதியில் மூன்று முக்கியமான சொற்றொடர்கள் காணப்படுகின்றன: "களைந்துபோட்டு" ("ஒதுக்கி வைத்து";* KJV*), "தரித்துக்கொண்டீர்கள்," "புதிதாக்கப்பட்டீர்கள்." "களைந்துபோட்டு" மற்றும் "தரித்துக்கொண்டீர்கள்," ஆகிய இரண்டும் கிரேக்க மொழியில் ஒரு முறை மாத்திரம் நிகழுகிற முக்கியமான முழு நிகழ்ச்சியைக் குறிக்கும் வினைச் சொற்கள். சில காரியம் நிகழ்ந்து முடிந்த பின் மீண்டும் செயல்படுத்த வேண்டிய அவசியமில்லை எனும் ரீதியில் திருமறை பேசுகிறது. "புதிதாக்கப்பட்டீர்கள்" எனும் வார்த்தை*

கிரேக்க நிகழ்கால வினைச் சொல், ஒரு தொடர் நிகழ்வை, அல்லது தொடர்ந்து வளருகிறத் தன்மையைக் குறிக்கிறது. கிறிஸ்துவினிடத்தில் மனமாறிய புதிய நபருக்கு இந்த காலங்கள் முக்கியமான சத்தியத்தை வெளிப்படுத்துகிறது. நீங்கள் கிறிஸ்தவராக மாறியதன் மூலம், நீங்கள் ஏற்கனவே "களைந்துபோட்டு" "தரித்துக் கொண்டிருக்கிறீர்கள்." இதன் பொருள் ஒரு முறை நிகழ்ந்து விட்டது, மீண்டும் நிகழ வேண்டுவதில்லை என்பதே. உங்கள் வாழ்க்கையில் பாவங்களை கொஞ்சம் கொஞ்சமாக விட்டுவிடுவதல்ல; பாவமான வாழ்க்கையிலிருந்து படிப்படியாக நீங்கள் மனந்திரும்ப முடியாது - நீங்கள் உடனடியாக நிறுத்த வேண்டும்! எப்படியிருப்பினும், உங்கள் "புதிய மனுஷன்" தொடர்ந்து படிப்படியாக உங்கள் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் (வசனம் 24). நீங்கள் இருக்க வேண்டிய முறையனைத்தும் திடீரென வந்து விடாது. மனமாற்றம் பாவம் செய்வதை மனமுவந்து நிறுத்த வைக்கும், பரிசுத்தத்திற்கென வளர்ச்சியடைந்த விசுவாசத்துக்குக் கொண்டு செல்லும்!

இந்த முன்னேற்றம் உங்கள் பகுதியில் ஒரு தொடர் செயலாக இருக்க வேண்டியது! நீங்கள் தொடர்ந்து கற்று, புரிந்து, வெளிச்சத்தில் நடக்க வேண்டும். நீங்கள் தொடர்ந்து விசுவாசத்தின் முதிர்ச்சியை நோக்கி முன்னேற வேண்டும் (பிலிப்பியர் 3:13-16).

## ஒரு ஒப்புக்கொடுத்த வாழ்க்கை (4:25-28)

தேவனுடைய ஏவப்பட்ட வசனங்களிலிருந்து கற்றுக் கொள்ளும் சத்தியத்தை சீராகப் பயன்படுத்துவதால் புதிய கிறிஸ்தவனை பரிசுத்தமாக்குதலில் நிறைவேற்றுகிறது! அவர் தொடர்ந்து தனது நடத்தை, பேச்சு, தோழமை கொண்டு செயல்படும் நபர்கள் ஆகியவைகளில் தனது இருள் நிறைந்த வாழ்க்கையில் கொண்டிருந்தவைகளில் ஆறுதலடைய முடியாது. ஒரு கிறிஸ்தவன் தனது மனமாற்றத்துக்கு முன்பு இருந்த வாழ்க்கையிலிருந்து முற்றிலும் வித்தியாசப்பட்டவன். இனியும் அவன் தவறானவைகளைப் பேசமாட்டான்; நேர்மை அவனது வாழ்க்கையில் பிரதானமாயிருக்கும். அவனது கோபம் கட்டுப்படுத்தப்பட்டு, பேசப்படும் ஒவ்வொரு வார்த்தையும் சந்தோஷத்தையும் ஆறுதலையும் கொண்டுவரத்தக்கதாக பிரயாசப்படுகிறான். அவன் கிறிஸ்துவுக்குள் இருப்பதால், சத்தியத்தை மட்டும் பேசி தனது எண்ணங்களை தெரிவுற விளங்கச் செய்கிறான். அவன் தன் வார்த்தையைக் காப்பாற்றுகிறவன் என்று அறியப்பட்டிருக்கிறான். அவன் சொல்லுவது ஒன்றும் செய்வது அதற்கு எதிரானதாகவுமிராது! அவனுடைய வார்த்தைகள் இரட்டை அர்த்தம் உள்ளவைகளாய் அவனது பேச்சு அவனுக்கு ஒரு பொருளையும் கேட்பவருக்கு ஒரு பொருளையும் கொடுக்கத் தக்கதாக இராது. கிறிஸ்தவன் பொய் பேசக்கூடாது! அவன் ஒரு வாக்குக் கொடுப்பானானால் அந்த வாக்கைக் காப்பாற்றக் கூடியவனாயிருக்கிறான். நம்பப்பட முடியாதவர்களாயிருப்பவர்கள் உண்மையான கிறிஸ்தவர்களல்ல என்று விளங்கப்பண்ணுகின்றனர் - நியாயத்தீர்ப்பு நாளில் கணக்கொப்புவிக்க கடமைப்பட்டவர்கள் (காண்க வெளிப்படுத்தின விசேஷம் 21:8).

விசுவாசமுள்ள கிறிஸ்தவன் ஒருபோதும் வெட்கப்பட்டு போவதில்லை. ஏனெனில் அவனுடைய வார்த்தை கொடுக்கப்பட்டபின் அது உண்மையல்ல என நிரூபிக்கப்பட்டாலும், அவன் தனது சொல்லை எப்போதும் காப்பாற்றுவான்.

*அவன் எதையும் மூடி மறைக்க முற்படுவதில்லை. கிறிஸ்துவின் முகவர்களாக, தனிமையிலும் பொது இடங்களிலும் எல்லாவற்றிற்கும் எல்லாமாக இருக்கக் கடமைப்பட்டிருக்கிறான்!*

## *ஒரு இரக்க குணமுள்ள வாழ்க்கை (4:29-32)*

*கிறிஸ்தவ வாழ்க்கைமுறை தயாளகுணமுள்ள இரக்கத்தை பிரதிபலிக்கும். நமது வார்த்தையின் பயன்பாடுகள் இரக்கத்துக்கு வழிகாட்டக் கூடியவைகளாயிருக்க வேண்டும் என்று பவுல் அடையாளப்படுத்துகிறார். தேவனைப் பிரியப்படுத்த முயற்சிக்கும் ஒருவர் தனது பேச்சு "தேவனுடைய பரிசுத்த ஆவியை துக்கப்படுத்த" வில்லை என்பதை உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும். ஒரு நபருடைய வார்த்தை காப்பாற்றப்படாவிட்டால், அவருடைய இருதயம் பொய்யால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதை வெளிப் படுத்துகிறது என்பதை வெளிப்படுத்துகிறது. கடின வார்த்தைகள் என்பது இருதயம் சுயநலத்தால் கட்டுப்படுத்தப்படுகிறது. முரட்டுத்தனமும் கெட்ட வார்த்தையுமுள்ள பேச்சு பேசுபவரின் இருதயம் அவபக்தியால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதை வெளிப்படுத்துகிறது. கிறிஸ்தவனின் வார்த்தைகள் "குறையுள்ளதாகவோ," அல்லது கெட்டுப் போனதாகவோ இருக்கக்கூடாது. தேவனுடைய பிள்ளையினிடத்தில் இதற்கு முற்றிலும் எதிரிடையான வாழ்க்கை முறை எதிர்பார்க்கப்படுகிறது!*

*புதிதாக மனமாற்றப்பட்டவர் இரக்கத்தினால் கட்டுப்படுத்தப்பட்டு கருணை காட்ட வழிநடத்தப்படுகிறார். இது கர்த்தரின் எண்ணப்போக்கை பின்பற்றும் மன்னிக்கும் எண்ணப்போக்கை விளைவிக்கும் தேவனைப் பின்பற்றுகிற நீங்கள் உங்கள் வார்த்தையில் உண்மையுள்ளவராக இருக்கிறீர்களா? ஜனங்கள் உங்கள் வார்த்தைகளை கேட்டு, என்ன கடினமான சூழ்நிலை ஏற்பட்டாலும், உங்கள் வார்த்தையைக் காப்பாற்றுவீர்கள் என்று அறிய முடியுமா? உங்கள் வார்த்தை எவ்வளவு பரிசுத்தமானது? உங்கள் பேச்சு கேட்கிறவர்களுக்கு கிருபை பொருந்தினதாய் இருக்கிறதா? (காண்க கொலோசெயர் 4:6.) தேவனுக்கு ஒப்புக்கொடுத்தவராய் உங்கள் வார்த்தையில் இரக்கம் காணப்படுகிறதா? ஆறுதல் தேவைப்படுவோரிடம் மன உருக்கமான வார்த்தைகளைப் பேசுகிறீர்களா? அன்பு, நல்வார்த்தை, இளகிய மனதுடைய வார்த்தைகள் உங்கள் பேச்சில் இடம் பெற வகை தேடுகிறீர்களா?*

*வியாபாரம் மற்றும் அரசியல் உலகில், ஜனங்கள் வார்த்தைகளை தேர்ந்தெடுத்து அவர்களுடைய பேச்சில் வரைமுறையை ஏற்படுத்தி பணத்தையும், கௌரவத்தையும் அதிகாரத்தையும் பெறுகிறார்கள். ஆகையால் அவர்களுக்கு வாக்குறுதிகளைக் கொடுத்து விட்டு பின்னதாக அது பொய்யானதாய் காணப் படுவது ஒன்றும் வழக்கத்துக்கு மாறானதல்ல. புகழ்ச்சிகள் எப்போதும் புனையப் படுபவைகள். கிறிஸ்தவர்கள் வித்தியாசப் பட்டவர்களாயிருக்க வேண்டும்! சத்தியம் தெளிவாகவும், நேரடியாகவும் அன்புடனும் பேசப்பட வேண்டும்!*

## நிறைவுறும் சிந்தனைகள்

*உங்கள் கிறிஸ்தவ வாழ்க்கைமுறை உங்கள் தேவ பக்தியோடே சுகந்த வாசனையை உலகத்துக்கு சேர்த்து வழங்குகிறது! கிறிஸ்துவின்*

*சுவிசேஷமாகிய கிருபையும் இரட்சிப்பும் நிறைந்த விலையேறப் பெற்ற செய்திக்கு ஆத்துமாக்களுக்கு வழிகாட்டுவதில் நீங்கள் ஒரு கலங்கரை விளக்காய் இருக்கிறீர்கள்! தேவனுடைய கட்டளைக்கு நீங்கள் கீழ்ப்படிந்ததினாலே, உங்கள் பாவங்கள் கழுவப்பட்டடன. நீங்கள் ஒரு வாழ்க்கைமுறையைக் களைந்து போட்டு மற்றொரு வாழ்க்கை முறையைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பது முற்றிலும் வித்தியாசமானது. நீங்கள் கிறிஸ்தவனானபோது (தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து பாவமன்னிப்பிற்கென்று முழுக்கப்பட்டீர்கள்), நீங்கள் உங்கள் வாழ்க்கை "புதிதாக்கப்பட்டு," கிறிஸ்து இயேசுவுக்குள் நீங்கள் அழைக்கப்பட்ட உன்னதமான அழைப்பின் இலக்குக்காக தொடருகிறீர்கள்! நீங்கள் "மீட்கப்படும் நாளுக்கென்று - முத்தரிக்கப்பட்டுள்ளீர்கள்" (4:30), ஆதலால் நீங்கள் பரிசுத்தமாய் வாழ வேண்டும்!*

*பின்வரும் கவிதை விவாதத்தை சரியாக நிறைவு செய்கிறது. இதில் வரும் வார்த்தைகள் கிறிஸ்தவ வாழ்க்கை தேவனுக்கென்று பரிசுத்தமாக்கப்பட்ட உண்மையை வலியுறுத்துகின்றன:*

*நீங்கள் ஒரு சுவிசேஷத்தை எழுதுகிறீர்கள்.*<br>
*ஒரு நாளைக்கு ஒரு அதிகாரமாக,*<br>
*நீங்கள் செய்யும் கிரியைகளாலும்,*<br>
*நீங்கள் சொல்லும் வார்த்தைகளாலும்.*

*விசுவாச மில்லாமலோ உண்மையோடோ,*<br>
*நீங்கள் எழுதுவதை மனுஷர்கள் வாசிக்கின்றனர்;*<br>
*சுவிசேஷம் என்றால் என்ன என்று சொல்லுங்கள்,*<br>
*உங்கள் எண்ணத்தின்படி?*[2]

*கிறிஸ்து இயேசுவில் காணப்படும் இரட்சிப்பைப் பற்றி அறிகிற அறிவை அடைய உலகத்தில் யாருக்காகிலும் உதவ வேண்டும் என்ற சரியான வழியில் தான் நீங்கள் வாழ்கிறீர்களா?*

---

குறிப்புகள்

[1]Edgar A. Guest, "Sermons We See," *Masterpieces of Religious Verse,* ed. James Dalton Morrison (New York: Harper & Brothers, 1948), 361. [2]Paul Gilbert, "Your Own Version," *Masterpieces of Religious Verse,* ed. James Dalton Morrison (New York: Harper & Brothers, 1948), 362.